மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 283/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. தவமணி | வயது | .. 64 |
| க/பெ. | .. சின்னக்குழந்தை | சாதி | .. |
| கிராமம் | .. மட்டபிறையூர் | சமயம் | .. |
| தாலுக்கா | .. போளூர் | தொழில் | .. விவசாயம் |

23.3.2022 - வா.சா.1 முதல் விசாரணை.

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 20.02.1991ல் வாதி கிரையம் பெற்ற பதிவு கிரைய பத்திர சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 20.07.2012ல் வழக்கு சொத்திற்கு போளூர் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட கணிணி சிட்டா வா.சா.ஆ.2. 20.07.2012ல் வழக்கு சொத்தின் 1421 பசலி ஆண்டிற்கான அடங்கல் கணக்கு பதிவேட்டின் உண்மை நகல் வா.சா.ஆ.3. வழக்கு சொத்துக்களின் புல எண்.201, 224-க்கான எப்.எம். காப்பி உண்மை நகல் 2 வரிசைகள் வா.சா.ஆ.4. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேலும் வாதி தரப்பில் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.